செய்தி வெளியீடு எண் : 504 நாள் : 09.03.2023

# செய்தி வெளியீடு

## <u>மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன், அவர்கள் சென்னை தரமணியில் உள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் இன்று (09.03.2023) ஆய்வு மேற்கொண்டார்கள்:–</u>

தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில், சென்னை தரமணியில் இயங்கி வரும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்று வரும் பல்வேறு சீரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (09.03.2023) ஆய்வு மேற்கொண்டார்கள். செய்தித் துறையின் மானியக் கோரிக்கையில் இந்த நிறுவனத்தை மேம்படுத்துகின்ற வகையில் பல்வேறு அறிவிப்புகளை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதனை செயல்படுத்துகின்ற வகையில் தற்போது பொதுப்பணித் துறை மூலமாக நடைபெற்று வரும் ரூ.7 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு திட்ட பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். குறிப்பாக, மறு ஒலிப்பதிவு திரையரங்க (R.R Theatre) பராமரிப்பு பணிகள், ஒலி ஒளி அமைப்புகள், ஏறத்தாழ 25ஆயிரம் சதுர அடி நிலப்பரப்பில் புதுப்பொலிவுடன் முழு அளவில் சீரமைக்கப்படவுள்ள குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்பு தளம், காவல் நிலையம், மாணவர் தங்கும் விடுதி, மழைநீர் வடிகால் கட்டமைப்பு மற்றும் சாலை வசதிகளை ஆய்வு செய்ததுடன் இப்பணிகளை விரைவுபடுத்துமாறு பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய உரையில், "தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமானது மிகவும் தொன்மையானது. இந்தியாவில் திரைப்பட தொழில்நுட்பத்திற்கென துவங்கப்பட்ட முதல் திரைப்பட கல்வி நிறுவனமும், திரைப்பட கல்விக்கென பட்டப் படிப்புகளை பயிற்றுவிக்கும் முதல் நிறுவனமாக சிறப்புகளை பெற்றுள்ளது. இக்கல்வி நிறுவனத்தை பல்வேறு அம்சங்களுடன் உலகத்தரத்திற்கு இணையான கல்வி நிறுவனமாக மாற்றிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, இந்நிறுவனத்திற்கான வளர்ச்சி பணிகளையும், கல்வி பணிகளையும் சிறப்பான முறையில் செயலாக்கப்படுத்திடும் வகையில் அனைத்து துறை அலுவலர்களும் பணியாற்ற வேண்டுமென மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத் தலைவர் திரு.வி.ராஜேஷ் அவர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் செயலாளர் முனைவர் இரா.செல்வராஜ், இ.ஆ.ப., அவர்கள், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் திரு.த.மோகன், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்(செய்தி) திரு.சிவ.சு.சரவணன் அவர்கள், கூடுதல் இயக்குநர்(மக்கள் தொடர்பு) திரு.மு.ப.அன்புச்சோழன் அவர்கள், இணை இயக்குநர்(நினைவகங்கள்)/முதல்வர்(மு.கூ.பொ) திரு.கு.தமிழ்செல்வராஜன் அவர்கள், பொதுப்பணித்துறையின் செயற்பொறியாளர் திரு.இ.இமானுவேல் ஜெய்கர் அவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in